
# திராவிடத்தால் வாழ்கிறோம்

940

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

135





'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

"மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி" என கழகத்தினருக்கு வழிகாட்டினார் பேரறிஞர் அண்ணா. அவரது கொள்கைப் பாதையில் பயணிக்கும் தமிழ்நாடு அரசு, மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக உருவாக்கிய திட்டம்தான் 'உங்களுடன் ஸ்டாலின்'.

தமிழ்நாட்டில் உள்ள கடைக்கோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் - திட்டங்கள் அவர்களின் வீட்டுக்கு அருகிலேயே சென்று வழங்குவதுதான் இந்தத் திட்டத்தின் நோக்கம்.

'அரசு சேவைகளை, பொதுமக்களுக்கு மிக விரைவாகவும் எளிதாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் கொண்டு சேர்ப்பதற்காக 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம் தொடங்கப்படும்' என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்திருந்தார். அதன்படி, 'முதல்வரின் முகவரி' துறை வழியே செயல்படுத்தப்படும் வகையில், விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, ஜூலை 15-ஆம் தேதி முதலமைச்சர் அவர்கள் இந்த திட்டத்தை சிதம்பரத்தில் தொடங்கி வைத்தார். 2025 ஜூலை முதல் நவம்பர் வரை பத்தாயிரம் சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளன. நகரப் பகுதிகளில் 3,738 இடங்களிலும், கிராமப் பகுதிகளில் 6,232 இடங்களிலும் முகாம் நடைபெறவுள்ளது.

## 45 நாட்களில் தீர்வு

நகர்ப்புறப் பகுதிகளில் நடக்கும் முகாம்களில் 13 துறைகள் 43 சேவைகள், கிராமப் பகுதிகளில் நடக்கும் முகாம்களில் 15 துறைகள் 46 சேவைகள் என மக்கள் எளிதாகப் பயன்பெறும் வகையில், திட்டமிடப்பட்டுள்ளன. இந்த முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க, சமூகப் பாதுகாப்புத் திட்ட இயக்குநர், கணினி இயக்குநர்கள் போன்றோருக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் தினமும் வெவ்வேறு இடங்களில் 6 முகாம்கள் நடத்தப்படும். முகாம்கள் நடக்கும் தகவல்களை 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தில் உள்ள இணையதளத்தில் அறிந்துகொள்ள முடியும்.




## மக்களின் கோரிக்கைகள்

'முதல்வரின் முகவரி' துறை மூலம், கடந்த நான்கு ஆண்டுகளில், ஒரு கோடியே 5 லட்சம் மனுக்கள் பெறப்பட்டு, அதில் 30.06.2025 வரை ஒரு கோடியே ஒரு இலட்சம் மனுக்களுக்குத் தீர்வுகள் காணப்பட்டுள்ளன. இந்தக் கோரிக்கை மனுக்களைப் பரிசீலனை செய்ததன் அடிப்படையில், 'பொதுமக்கள் பல்வேறு திட்டங்களில் பயனடைவதற்காக நிறைய அலுவலகங்களுக்கும், மாவட்ட அளவிலான அலுவலகங்களுக்கும் செல்ல வேண்டியிருக்கிறது. இதனால், நிறைய சிரமத்துக்கு ஆளாகின்றனர் என்பதை அறிந்த அரசு, மக்களைத் தேடிச்சென்று, தன்னார்வலர்கள் வழியாகவும், பொது மக்களுக்குத் தகவல் கொண்டு சேர்க்கப்படுகிறது.

இந்த முகாம்களில் மகளிர் உரிமைத் தொகைக்கு விண்ணப்பம் செய்வதற்கு, ஒவ்வொரு முகாமிலும் 4 வரிசைகள் அமைக்கப்படுகின்றன. ஆதார் சேவைக்கு 30 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும். இந்த முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மீது 45 நாட்களுக்குள் தீர்வு காணப்பட வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது.

அவர்களுக்கு அருகாமையிலேயே அரசின் சேவைகளைத் தர வேண்டும் என்ற நோக்கத்துடன் 'மக்களுடன் முதல்வர்' என்ற திட்டத்தை 2023-ஆம் ஆண்டு தொடங்கியது.

இந்தத் திட்டம் சென்னை உள்ளிட்ட அனைத்து நகரப் பகுதிகளிலும், கிராமப்புறங்களி லும் 2023 நவம்பர் முதல் 2024 ஜனவரி வரை யிலும் 2024 ஜூலை முதல் செப்டம்பர் வரையிலும் நடைபெற்றன. மூன்றாம் கட்டமாக 2025 ஜனவரி முதல் ஜூன் 30 வரை நடைபெற்றது.



இந்த முகாம்களில் பெறப்பட்ட கோரிக்கை மனுக்களை ஆய்வு செய்ததில், பட்டா மாற்றம், மின்னிணைப்பு பெயர் மாற்றம், வரி உரிமம் அனுமதி, குடும்ப அட்டை முகவரி மாற்றம் போன்ற கோரிக்கைகளுடன் சமூகநலப் பாதுகாப்புத் திட்டம், ஓய்வூதியம், இலவச வீட்டுமனை பட்டா ஆகிய கோரிக்கை கள், முதன்மையான 10 கோரிக்கைகளாக இருந்துள்ளன.

இதையடுத்து மக்கள், கோரிக்கையாக வைக்கும் அரசு சேவைகள் அனைத்தும், ஒரே இடத்தில் கிடைப்பதுபோலவும், மக்கள் அரசு அலுவலகங்களுக்குச் செல்லாமல், அவர்களுக்கு அருகிலேயே கிடைப்பதுபோலவும், முகாம்கள் நடத்த வேண்டும் என முதலமைச்சர் அவர்கள் ஆணையிட, 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம் செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

## தன்னார்வலர்கள் ஈடுபாடு

முகாம் நடைபெறும் தகவல், தன்னார்வலர்கள் மூலம் ஒவ்வொரு கிராமத்துக்கும் தெரிவிக்கப்படுகிறது. இதற்காக ஒரு லட்சம் தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். மக்கள் எந்தத் துறைக்கு விண்ணப்பம் செய்திருந்தாலும், அதற்காக கொண்டு வர வேண்டிய ஆவணங்கள் என்ன என்பதைத் தன்னார்வலர்கள் முன்கூட்டியே மக்களிடத்தில் விளக்குகின்றனர்.





> திட்டத்தை முடக்க நீதிமன்றம் வரை சிலர் சென்றபோது, உறுதி குலையாமல் வென்று வந்தது 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம்.

10,000 மக்கள்தொகைக்கு ஒரு முகாம் நடத்தப்படுவது, இந்தியாவிலேயே புதிய நடைமுறையாக உங்களுடன் ஸ்டாலின்' திட்டம் பெரும் வெற்றிபெற்றுள்ளது. அனைத்து அரசுத் துறைகளும் ஒரே இடத்தில், ஒரே நேரத்தில் நடத்தப்படுவது 'மக்களுக்கான அரசு' என்பதற்கான சான்றாக உள்ளது. திட்டத்தை முடக்க நீதிமன்றம் வரை சிலர் சென்றபோது, உறுதி குலையாமல் வென்று வந்தது 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம்.

...சாதனை தொடரும்



## இளைஞர் அணியின் வரலாற்றை விவரிக்கும் 'தாய்ப்பயணம்'!

1980-ஆம் ஆண்டு மதுரை, ஜான்சி ராணி பூங்காவில், 5,000 உறுப்பினர்களுடன், கழகத்தின் இன்றைய தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட தி.மு.கழக இளைஞர் அணியானது, இளைஞர் அணிச் செயலாளராக மாண்புமிகு துணை முதலமைச்சர் பொறுப்பு வகிக்கும் நிலையில், 5 லட்சம் நிர்வாகிகள் கொண்ட பிரமாண்ட இயக்கமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது.

இந்தியத் துணைக்கண்டத்தில் முதன்முதலில் இளைஞர் அணியைக் கட்டமைத்த கழகம் என்ற பெருமிதத்துடன், தி.மு.கழக இளைஞர் அணி, தற்போது 46-வது ஆண்டை எட்டியிருக்கிறது. சோதனைகள் ஏற்பட்ட காலங்களில் எல்லாம் இயக்கத்தை மீட்டுருவாக்கம் செய்யும் முதன்மை அணி என்ற பெருமையும் இளைஞர் அணிக்கு உண்டு. தி.மு.கழகத்தை நோக்கி வரும் இளைஞர்களை கருத்தியல் ரீதியாக கூர்தீட்டும் பணியையும் இடைவிடாமல் செய்யும் அணி இளைஞர் அணி.

அந்த வரலாற்றை இயக்கத்தினரும், தமிழ்நாட்டு மக்களும் அறிந்துகொள்வதற்காக உருவாகியிருக்கும் நூல் 'தாய்ப்பயணம்'. கழக இலக்கிய அணியின் இணைச்செயலாளர் ஈரோடு இறைவன் அவர்கள் இந்நூலை இரண்டு பாகங்களாக எழுதியுள்ளார். ஆழமான வரலாற்றுத் தகவல்களை, நேர்த்தியாகக் கோர்த்து, அரசியல் ஆர்வம் உள்ள எவரையும் வாசிக்கத் தூண்டும் வண்ணம் இந்நூலை எழுதியிருக்கிறார்.

நக்கீரன் பப்ளிகேஷன்ஸ் இந்நூலை வெளியிட்டுள்ளது. இரண்டு பாகங்களும் சேர்த்து 475 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## ஃப்ளாஷ்பேக்



### புதுச்சேரியில் தலைவருக்கு வரவேற்பு!



செ.நடராஜன்

2011-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்தையொட்டி முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் புதுச்சேரி வழியாக திருவாரூர் சென்றபோது, புதுச்சேரியில் உள்ள ஓட்டல் அண்ணாமலையில் சிறிது நேரம் ஓய்வெடுத்தார். அப்போது, தலைவர் அவர்களை சந்தித்து வரவேற்பு அளித்து, வாழ்த்துப் பெற்றேன். உடன் புதுச்சேரி கழக நிர்வாகிகள்.

**- செ.நடராஜன், கழகத் தொகுதிச் செயலாளர், நெல்லித்தோப்பு தொகுதி, புதுச்சேரி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### உழவர் உரிமை நாள்!

1961-ஆம் ஆண்டு செப்டம்பர் 25-ஆம் நாள் 'உழவர் உரிமை நாள்' கொண்டாடியது கழகம். நில உச்சவரம்புச் சட்டத்தில் குறைந்த அளவு 30 ஏக்கர் என்பதை 15 ஏக்கர் என்று மாற்றவேண்டும் என்று தி.மு.க. கோரியது. சட்டத்தின் குறைபாடுகளைப் பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்ல சட்டமன்றத்தின் முன் 28.09.1961 அன்று காலை 8 மணிக்கு, கழகத் தொழிற்சங்கச் செயலாளர் ஏ.கோவிந்தசாமி தலைமையில் பேரணி நடத்தப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131